சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 109/2022 Date: 22.07.2025

வாதி தரப்பு சாட்சி–4(Pw4) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திரு.சம்சுல் ஆரிப், கிரேடு–2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருவையா | சாதி | : | |
| த/பெ | : | முத்துராமன் | சமயம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>முதல் விசாரணை–</u>

1. நான் மாவட்ட வருவாய் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களில் 26.03.2021ம் தேதிய மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறை ஆணை கொண்டு வந்துள்ளேன். நி.மு.ஆ.2/18529/2016 கோப்பினை கொண்டு வந்துள்ளேன். 26.03.2021ம் தேதிய நி.மு.ஆ.2/18529/2016 செயல்முறை ஆணைகள் உண்மை நகல் **சா.சா.ஆ.9** ஆகும்.

2. 1ம் பிரதிவாதி ராவனேஸ்வரன் சிவகாசி, வருவாய் கோட்டாட்சியரிடம் ஈஞ்சார் கிராமம் சர்வே எண்.964/2 ஏ 3 நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா சீர்திருத்தம் செய்வதற்கு மனு தாக்கல் செய்து ராவனேஸ்வரன் பெயரில் பட்டா வழங்குவதற்கு முகாந்திரம் இல்லை என பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.964/2 ஏ 3, பட்டா எண்.1164 ல் 1ம் பிரதிவாதி ராவனேஸ்வரன்,

சுபாஷ்சந்திரபோஸ் என்ற மோகன் ஆகியோர் பெயரில் உள்ள கூட்டுபட்டாவை ரத்து செய்து ராவனேஸ்வரன் பெயரில் தனிப்பட்டா வழங்க மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு தாக்கல் செய்ததின் அடிப்படையில் நி.மு.ஆ.2/18529/2016 ன் படி செயல்முறை உத்தரவு 26.03.2021 ம் தேதி பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. சா.சா.ஆ.9 ல் இவ்வழக்கின் வாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள W.P.(MD)No.3499/2021 மற்றும் W.P.(MD)No.21661/2021 ஆகிய உத்தரவு நகல்கள் எங்கள் கோப்பில் இல்லை, மேற்படி செயல்முறை ஆணைக்கு பின்னர் ஏற்பட்ட உத்தரவுகள் என்பதால் எங்களிடம் இல்லை. 26.03.2021 ம் தேதிய மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய உத்தரவிற்கு எதிராக வாதிகள் தரப்பில் நீதிபேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4. 26.03.2021 ம் தேதிய நி.மு.ஆ.2/18529/2016 செயல்முறை ஆணைகள் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு உரிய முறையில் அறிவிப்பு அனுப்பப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.